989

# கொங்கு மலர்




13 AUG 1935

யுவ-ஆண்டு ஆனித்திங்கள்.

மலர் உ இதழ் ௩

ஆண்டுக்கட்டணம் ரூ. 1—8—0.
தனிப்பிரதி அணா 0—2—0.

## உள்ளுறை.

பக்கம்.


| | | | |
|---|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் | (செய்யுள்) | 67 |
| 2. | பழைய பாட்டு | ,, | 67 |
| 3. | தொகுதிகள் | ,, | 68 |
| 4. | மழை | ,, | 69 |
| 5. | போற்றிசெயல் | ,, | 70 |
| 6. | பண்டைய சரித்திரம் | | 71 |
| 7. | நாடகத்தமிழ் | | 74 |
| 8. | குவாட் பூகம்பம் | | 79 |
| 9. | பேரூர் அரசம்பலவானர் சன்னதி முறை விண்ணப்பதிகம் | | 82 |
| 10. | பெரியபுராண உரை வெளியீடு | | 85 |
| 11. | குன்றுதோருடல் | | 87 |
| 12. | கன்னட தேசத்தின் ஹொய்சள அரசர் ஆலயங்களின் சிற்ப விசேடங்கள் | | 90 |

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 AUG 1935
MADRAS



# செய்யுட் பகுதி.

## கடவுள் வணக்கம்.

மன்னீர் இலங்கையர்தங் கோமான் வலிதொலைய விரலாலூன்றி
முந்நீர்க் கடல்நஞ்சை யுண்டார்க் கிடம்போலும் முனைசேர் சீயம்
அன்னீர் மைகுன்றி யழலால் வலிகுறைய வழியுமுன்றிற்
செந்நீர் பரப்பச் சிறந்து கரியொளிக்குத் திருநணாவே.

திருநணா—திருஞான சம்பந்தர் தேவாரம்.

## பழைய பாட்டு.

### கொங்குநாட்டில் ஸ்ரீமத் சுந்தரமூர்த்தி சுவாமிகள் செய்த முதல் விஜயம்.

அந்நிலை நிகழ்ந்த ஆரருள் பெற்ற
அன்பனார் இன்பவெள் ளத்து
மன்னிய பாடல் மகிழ்ந்துடன் பாவி
வளம்பதி அதனிடை மருவிப்
"பொன்மணி மன்றுள் எடுத்தசே வடியார்
புரிநடங் கும்பிடப் பெற்றால்
என்இனிப் புறம்போய் எய்துவ" தென்று
மீண்டெழுந் தருளுதற் கெழுவார்.

(செ. 91)

ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்
—பெரிய புராணம்.

## புதுச் செய்யுள்

## தொகுதிகள்.

ஏகாந்தம் இனிதினிதென் றெடுத்துரைத்தார் ஔவையார்
ஏகாந்தத் தற்புதங்கள் ஏவைஎனும்ஓர் ஆங்கிலனர்.
ஏகாந்தத் தினிமையினை இந்தியர்கள் காணிடிலோ
ஏகாந்தத் தெவ்வின்பும் ஏனையர்கள் காண்கிலரால்.

தொழுகையிலே தனித்திருந்துத் தொழுதிடும்நம் இனத்தவர்கள்
அழுகையிலே கூட்டமதாய் அங்கிரைச்சல் செய்திடுவர்
தொழுகையிலே விலியர்கள் தொகுதிகளாய்த் தொழுதிடுங்கால்
அழுகையவர்க் கெக்காலும் அணைந்திடுமோ அறைவீரே.

தனிமரமாய் நின்றிடுங்கால் தாராதெந் நலனெனினும்
பனைமரமோ தொகுதிகளில் பார்க்கையிலே வியப்புதரும்
கனிமரமே ஆமெனினும் களிப்பதிகம் தரும்வண்ணம்
வனவனமாய் வளர்ந்திடலால் வளப்பதனில் மிகுமன்றே.

ஒருகுருவி கம்பியின்மேல் உட்காரத் தோரணம்போல்
அருகினிலே பலகுருவி அமர்ந்திருக்க அருணனெளி
பெருகிவரும் அமயத்தே பெருமகிழ்வில் அசைந்தாடும்
திருவழகைக் காணிடுங்கால் தேர்வடையும் நம்மனதே.

கரிசல்நிலம் பரந்திருக்கக் கண்திகைத்துச் சோர்வடையும்
எரிதபனன் வருகையிலே ஏங்கிவிடும் உயிரெல்லாம்,
வரிசையிலே மரமிருந்தும் வரட்சியினைத் தணித்திடுமோ,
சரிசமனில் விளைபருத்தி தந்திடுமே பச்செனவே.

தனியாடோ எருமையுமோ தனிமாடோ எதிர்நிற்க
முனியாது முன்செல்லும் மோட்டாரான் கிடையாதே.
குனியாத மாட்டினமும் குனிந்தேகும் ஆட்டினமும்
இனிதேகக் கண்டிடிலோ இரங்கிடுவான் அவைகண்டே.

மிகுதிரள்சேர் ஆசிரியர் மிளிர்கூட்டத் ததில்பேசப்
புகுதிரெனக் காங்கயத்தார் புகலவாங் கேகையிலே.
தொகுதிகளின் ஆற்றலொடு தோற்றமுமே யாம்கண்டோம்
தகுதியென அதன்பெருமைத் தனம்கண்டு வியந்தனமே.

**கோவைக்கிழார்.**

குறிப்பு:—ஆசிரியர் காங்கயத்தில் ஆசிரியர் கூட்டத்திற்குச் சென்ற போது அனுபவித்தவைகளைப்பற்றிப் பாடியது.

## "மழை"

### (கிளிக்கண்ணி மெட்டு)

1. பங்குனித் திங்களெல்லாம் பாழும் வெய்யில்கொளுத்த
எங்கொளித் தேயிருந்தாய்? மழையே!
இன்று வந்தே பொழிந்தாய்.

2. நேற்று முதலாய் வானம் நீலநிறம் விடுத்துத்
தோற்றிய தாலேயின்று, மழையே!
ஊற்று வாயென் றுணர்ந்தேன்.

3. வற்றிய நீர்நிலைகள் வாடிய பயிரினங்கள்
நித்தமும் உன்வரவை, மழையே!
நத்தியிருந்தன வால்.

4. பொன்னைப் பொழிந்தாலும் பூ அன்னை மனங்குளிராள்
மின்னல் இடிமுழங்க, மழையே!
உன்னை விரும்புகின்றாள்.

5. உன்னையின்றி யுலகில் என்னசெய்யமுடியும்
தின்ன உணவிங்கேது? மழையே!
தெய்வவழிபா டேது.

6. மாரியல்லாது வேறு காரியம் இல்லையென்ற
சீரிய உண்மைதன்னை, மழையே!
நேரில்நான் கண்டுகொ ண்டேன்.

7. உண்பவர்க் குண்ணும் பொருள் உண்டாக்கி யுண்பவர்க்கு
உண்ணும் உணவுமாவாய், மழையே!
உன்னவரிதுன்பெருமை.

8. ஆர்கலிதன்னைக்கடைந் தமிழ்தமடைந்தாரென்றும்
ஓர்கதை யுண்மைதன்னை, மழையே!
உணர்ந்திட லாகும் உன்னால்.

9. வானத்திலிருந்து கீழே வருவதனாலேயன்று
போனவமிழ்தம் இன்று, மழையாய்
மீளவும் வந்ததென் பேன்.

10. நல்லகுணங்கள் என்றும் தீயகுணங்கள் என்றும்
செல்வர் ஏழைகள் என்றும் உலகோர்
சொல்வதைச் சற்றுஎண்ணாய்!

11. மானிடர் தங்கட்குள்ளே வருந்திடுபேதம் எல்லாம்
வீணிது வென்பாய்போல; மழையே!
வேற்றுமை யின்றிப்பெய்வாய்.

—A துரைசாமி பிள்ளை.

## மொழி பெயர்ப்பு.

### *போற்றிசெயல்.

எவனொருவன் தன்சுயேச்சைக் கேங்கிப்போர் இடுவானோ,
எவனொருவன் பிறர்மீட்சிக் கியக்கியமர் விளைப்பானோ,
எவனொருவன் சோர்வுற்றும் பொறுமையுடன் முயலுவனோ,
அவனொருவன் போற்றிசெயும் அவனாவான் உண்மையிலே.

எவனெதையும் நேசிப்பான், யாரையும்தான் வெறுத்திலனோ,
எவன்குறைந்த பக்கத்தும் அனுதாபம் இயங்குவனோ,
எவன்தான்கொள் உண்மைக்காய் இனியஉயிர் அளிப்பானோ,
அவன் ஒருவன் போற்றிசெயும் அவனாவான் மெய்யினிலே.

எவனொருவன் ஒருஉண்மை உணர்ந்தறிந்தும் அதுதன்னை
அவன்தழுவி சுகதுக்கம் அனைத்திலுமே அதைக்கொள்வான்
எவன்தானே தனிபட்டும் இயக்குவதில் முற்படுமோ
அவன்ஒருவன் போற்றிசெயும் அவனாவான் வாய்மையிலே.

எண்ணத்தில் வல்லமையே எதிர்நிலைக்க வரவேண்டும்
விண்ணப்பம் எப்பொழுதும் வெறும்புகையாய் மாறிடுமே
திண்ணியதாம் செய்கைகளோ திகழ்உண்மைப் போற்றுதலாம்
நண்ணிடுவாய் அவ்விதமாய் நனியுணர்ந்து போற்றிடவே.

—கோவைக்கிழார்.

---

* Dr. Annie Besant எழுதின Prayer என்பதின் மொழிபெயர்ப்பு.

# சரிதப் பகுதி.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 AUG 1935
MADRAS

## பண்டைய சரித்திரம்.

### கொங்குதேச ராஜாக்கள்.

---

சென்ற இதழ்களில் சரித்திர பாகங்களில் கிறிஸ்து ஆப்தத்தின் ஆரம்பத்தில் அதாவது ஒன்றிரண்டு நூற்றாண்டுகள் வரை கொங்கு நாட்டின் சரித்திரத்தை ஒருவாறு தொகுத்து எழுதினோம். இனி கிறிஸ்தாப்தத்தின் மூன்றாவது நூற்றாண்டு முதல் சோழர்கள் கொங்கு நாட்டை ஆக்கிரமித்துக் கொண்ட காலம் அதாவது 9-வது நூற்றாண்டுவரை உள்ள சரிதத்தை ஆராயவேண்டி வரும். அக்காலத்திய சரித்திரத்தைப்பற்றி கூறக்கூடிய கல்வெட்டுகளோ அல்லது இலக்கிய நூல்களோ கொங்கு நாட்டில் நாளதுவரை கிடைக்கவில்லை. ஆனால் "கொங்கு தேச ராஜாக்கள்" என்ற பெயர் கொண்ட ஒரு கையெழுத்துப்பிரதி அரசாங்கத்தார் கையெழுத்துப் புத்தக சாலையில் இருக்கின்றது. மதுரைப் பாண்டியன் புத்தகசாலையில் இருக்கும் பிரதியில் உள்ளபடி செந்தமிழில் முந்தி பிரசுரித்திருக்கிறார்கள். இந்நூலில் கொங்கு தேசத்தை ஆண்ட அரச பரம்பரையைப்பற்றிச் சொல்லியிருக்கிறது. ஆதிமுதல் ஆண்டு வந்த அரச பரம்பரையினருடைய விவரம் முழுவதும் எழுதப்பட்டிருக்கிறது. இந்நூல் வசன நடையில் எழுதப்பட்டுள்ளது. வடமொழிப்பதங்கள் அதிகமாக உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. வசன நடையும் தற்கால நடையைப்போல் இருக்கின்றது. இந்நூலை ஆராய்ந்து படித்த ஒரு சரித்திராசிரியர் இது பதினாறாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட ஒரு சரித நூல் என்று கூறியிருக்கின்றார். ஆனால் அந்நூலின் நடையைப்பார்க்குமிடத்து அது இன்னமும் பிந்திய காலத்தியதாக இருக்கலாம் என்று தோன்றும். இந்நூல் எழுதியவர் இன்னார் என்றாவது அது இந்த இடத்தில் என்றாவது தெரியவில்லை.

ஆகவே இந்நூலில் கண்ட சங்கதிகள் உண்மையாய் இருக்குமா என்றும் கூட ஐயம் ஏற்படலாம். ஆனால் நூலில் கண்ட பல விஷயங்களைக் கவனித்துப்பார்த்து அவைகளை மற்ற அக்கம் பக்கத்துத் தேசங்களின் சரித விஷயங்களோடு ஒத்திட்டுப்பார்க்கும் பக்ஷத்தில் பல விஷயங்கள் ஒத்திருப்பதால் இந்நூல் சரித்திர ஆராய்ச்சிக்கு ஒத்ததான ஒரு நூல் என்று கூறவேண்டும். முதலிலிருந்து ஆண்டதாகச் சொல்லியிருக்கும் அரசர்களின் பெயர்களும் அவர்கள் ஆண்ட இடங்களின் பெயர்களும் சுத்த வடமொழிப் பெயர்களாக இருப்பதை பார்க்கும்போது வடமொழி அதிகமாகக் கலக்காத நாடாகிய கொங்கு நாட்டில் இப்பெயர்கள் எங்கே வந்தன என சந்தேகிக்கலாம். ஆனால் ஒரு சமாதானம் கூற முடியும். நான்கு ஐந்து நூற்றாண்டுகளாக நூலாசிரியர்கள் வடமொழிக்கலப்பையே மேன்மையானதென்று கொண்டிருந்தார்கள். சுத்தமான தமிழ் வார்த்தைகளுக்கும் வடமொழிப்பெயர் தேடிக்கொடுத்து அதனையே உபயோகப்படுத்துவார்கள். அரசர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நாடு, நகரம், நதி, குளம், முதலியவைகளுக்கும் தமிழ்ப்பெயர் வழக்கத்திலிருக்க வடமொழிப்பெயரை நூல்களில் எழுதிவிடுவதுண்டு. பிட்டிதேவனை விஷ்ணுவர்த்தனன் என்றும், இளையாழ்வாரை இராமாநுஜர் என்றும், பெரிய நம்பியை மகாபூர்ணர் என்றும், கொடுமுடியை மகுடாபுரி என்றும் பட்டீசுவரரை கோடீஸ்வரர் என்றும், பச்சைநாயகியை மரகதாம்பாள் என்றும், கப்பினிநதியை கபிலநதி என்றும் மொழிபெயர்த்துப் பதிப்பித்த நோக்கத்தை இங்கு அறிந்துகொள்ளலாம். இந்நோக்கத்தை அனுசரித்தே பிற்காலத்தில் எழுதிய கொங்குதேச ராஜாக்களின் சரித்திராசிரியர் தமிழ்ப்பெயர்களை வடமொழிப் பெயர்களாக மாற்றியிருக்கக்கூடும்.

கொங்கு தேசத்தை ஆரம்பத்தில் ஆண்டதாகக்கூறியிருக்கும் ஏழு எட்டு அரசர்கள் தங்களுக்குத் தலைநகராக ஸ்கந்தபுரத்தைக் கொண்டு அங்கே ஆண்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்கந்தபுரம் எது என்று தெரியவில்லை. அப்பெயர் உலகவழக்கில் வழங்கும் ஒரு தமிழ் மொழியின் வடமொழிப்பெயராக இருக்கலாம். பேரூரு

க்கு ஆதிபுரி, முத்தூருக்கு முக்தாபுரி, வள்ளலூருக்கு அன்னதான சிவபுரி என்ற பெயர்கள்போல எனலாம். பிறகு பத்தாவது தலை முறையில் வந்த கொங்கு மன்னன் தளவனபுரத்தை தலைநகராகக் கொண்டு அரசாண்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தளவனபுரம் என்பது தலைக்காடு என்ற தமிழ்ப்பெயரின் வடமொழியாகும். வடமொழிப்பெயர் புகுத்திவிட்டதற்கு ஒரு கதை கட்டி அதனை ஒரு புராணத்திலும் ஏற்றியிருக்கிறார்கள். இவ்விரண்டு உதாரணங் களாலேயே கொங்கு தேச ராஜாக்கள் என்ற நூலில் உள்ள பெயர் களெல்லாம் புனைப்பெயர்களாக இருக்கவேண்டுமென்று ஊகிக்க லாம். ஆனால் சரித்திர உண்மைகள் இந்நூலில் பெரிதும் உண்டு என்றே கொள்ளவேண்டும். அவைகளைப்பற்றி அதிகமாக அடுத்த இதழில் எழுதுவோம்.

—கோவைக்கிழார்.

---

## பதினெண்கீழ்க் கணக்கும்—ஆசிரியர் பெயரும்.

நாலடி சைனர் தந்தார்; நான்மணி விளம்பி நாகன்;
எலாதி கணிமேதையார்; இன்னிலை பொய்கை யாரே;
காலங்கார் கண்ணன் கூத்தன்; களவழி பொய்கை யார்; ஐம்
மூலமே காரி யாசான் முதுமொழி கூடலோனே.

[காலம் கார்—கார் நாற்பது; கூடலோன்—கூடற்கிழார்]

இன்னிய பூதஞ் சேந்தன்; இன்னாத கபிலன்; கோவை
பன்பெரும் வாயின்முள்ளி; பழமொழி நானூ றாய்ந்த
முன்றுறை யரையன்; முப்பால் மொழியும் வள் ளுவரே சீலக்
கன்னல்போல் அறங்கூறிட்ட கடுகம் நல் லாதன் சொன்னான்

[பன்—ஆய்ந்த—மொழியும்: இவை அடைமொழிகள்; சீலக்கன்னல் போல் அறங்கூறிட்ட: இவ்வகையைத் திரிகடுகத்தோடு மேல் பதி னொரு நூல்களோடும் ஒட்டுக]

பண்டிதர், S. ஐயாசாமிப் பிள்ளை.

சென்ற இதழில் 46-ம் பக்கத்தில் பிரசுரித்த பாட்டும்
இவர் எழுதியதே.

# கலைப்பகுதி



மலையாளி வேதாளி வாணி குதிரை
சிலையாடு வேடு சிவப்புத்—தலையில்

திருவிளக்குப் பிச்சி திருக்குன் றயிற்பெண்
டிருண்முகத்துப் பேதை யிருளன்—பொருமுகத்துப்

பல்லாங் குழியே பகடி பகவதியாள்
நல்லார்தங் தோள்வீச்சு நற்சாழல்—அல்லாத

உந்தி அவலிடி ஊராளி யோகினிச்சி
குந்திவரும் பாரன் குணலைக்கூத்—தந்தியம்போ

தாடுங் களிகோய்யு முள்ளிப்பூ வையனுக்குப்
பாடும்பாட் டாடும் படுபள்ளி—நாடறியும்

கும்பீடு நாட்டம் குணாட்டம் குணலையே
துஞ்சாத சும்மைப்பூச் சோனக—மஞ்சரி

ஏற்ற உழைமை பறைமைமுதல் என்றெண்ணிக்
கோத்தவரிக் கூத்தின் குலம்.

இத்தொண்ணூற்றாறு கூத்துக்களுள் பெரும்பாலன இன்னவையென விளங்கவில்லை. இவை நாடகக் கதையுரைப்பன வல்லவெனினும் நாடகத் தோற்றத்திற்கு ஓரளவு கருவியாயிருப்பது பின்னர் தோற்றம் உரைக்குங்கால் கருதப்பெறும்.

## கூத்தர்.

நாடகம் எனும் பொருள்பற்றிப் பேசுங்கால், நாடக நூலன்று கருத்தைக் கவருவது, மற்றும் நாடகம் நடிப்பதே ஆகும். அந்நிலையில் நின்று பார்ப்பவர் யாரும் பண்டைநாளில் நாடகக் களியாட்டேனும் இருந்ததுவோ என அறிய விரும்புவார்.

திருவிழாக் காலங்களிலே மக்கள் விளையாட்டயர்வது எங்கணும் உள்ளதோர் வழக்கம். பல்வேறு பொழுது போக்குகளுள்

நாடகமாடுதலும் ஒன்று. மக்களெல்லாரும் கூத்தாடிப் பொழுது போக்குவார் என்பதின்றி ஒருசிலரே நாடகம் பயின்று அதனை நடித்துக்காட்டி ஏனையோர்க்கு மகிழ்வூட்டுவர். அக்கூத்தாட்டும், கூத்தரும் நஞ்செந்தமிழ் நாட்டில் இருந்ததுண்டா என்று ஈண்டு சிறிது கவனிப்போம்.

கூத்தாடியதாகவும் கூத்தர் இருந்தனராகவும் பழந்தமிழ் நூல்கள் பலவுங்கூறுகின்றன. அக்கூத்தர்களுக்குப் பல்வேறு பெயர்களுங்காண்கின்றன. ஆனால் அக்கூத்து, குரவைக் கூத்தோ, அவிநயக்கூத்தோ, வசைக்கூத்தோ, நகைக்கூத்தோ அல்லது நாடகக் கூத்துத்தானோ என்று துணிந்து கூறுதற்குக் கூடாமையாயிருக்கிறது.

கூத்தர் பெயராக வழங்குஞ் சொற்கள் கீழ்வருவன.

நாடகர் கண் ணு ளாளர் நடர்வயி ரியர்நி ருத்தர்
கோடியர் பொருநர் கூத்தர் அவிநயர் என்றுங் கூறும்
நீடிய வாயிலோரே நெடுந்தமிழ்க் கூத்தரென்பர்
ஆடும்வே ழம்ப ரென்ப கழாயருக் கடைத்த நாமம்.

[சூடாமணி நிகண்டு]

இச்செய்யுளில் மூன்றுவகைக் கூத்தருக்குப் பெயர் கூறப்பட்டிருக்கின்றது.

கூத்தர்: நாடகர், கண்ணுளாளர், நடர், வயிரியர், நிருத்தர், கோடியர், பொருநர்; அவிநயர்.

தமிழ்க்கூத்தர்: வாயிலோர், கழைக்கூத்தர்: வேழம்பர்.

ஈண்டுக்கூறிய பெயர்களுள் கோடியர் வயிரியர், கண்ணுளர் என்பன கருதற்பாலன. புறநானூறு, பத்துப்பாட்டு முதலிய நூல்களில் இச்சொற்களைப் பலவிடத்துங் காணலாம். அகராதிகளில் இவற்றிற்கு விநோதக்கூத்தர், (Comedians) சாந்திக்கூத்தர், கூத்தர் (Dancers) என்னும் பொருள்கள் காண்கின்றன. திவாகரத்தில் நடித்தலுக்குப் பல குறியீடுகள் தொகுக்குங்கால கண்ணுள் என்பதொன்றும் உடன் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

இனி இச்சொற்கள் வழங்கும் பழம் பாட்டடிகளேயுஞ் சில காட்டுதும்.

புறப்பாட்டில் சேட்சென்னி நலங்கிள்ளியை உறையூர் முது கண்ணன் சாத்தனுர் பாடியதாகக் காணும்

......................................விழவிற்
கோடியர் நீர்மை போல முறைமுறை
ஆனோர் கழியும் இவ்வுலகத்துக் கூடிய
நகைப்புற ஞகநின் சுற்றம்

என்னும் செய்யுட்பகுதியில்

"திருவிழாக் காலத்தில் ஆடும் கூத்தராது வேறுபட்டகோலம் போல, அடைவடைவே தோன்றி, இயங்கி, இறந்துபோகின்ற இவ்வுலகத்தின்கண் பொருந்திய மகிழ்ச்சியை நின் சுற்றத்தார் அடைவதாக," என்னும் பொருளுடைக் குறிப்பை ஆராய்வோம்

i திருவிழாக் காலங்களில் கூத்தாடுதல் என்னும் வழக்குப் பழங்காலத்தும் இருந்து வந்ததென்பது "விழவிற் கோடியர்" எனும் உரையால் நன்கு புலனுகின்றது, இச்சில ஆண்டுகளுக்கு முன்னர் திருவிழாத் தெருக்கூத்துத் தமிழ்நாடெங்கணும் மலிந்திருந்தது. பொதுவாகக் கூறுமிடத்து இந்தியநாடெங்கணும் இவ்விழாக்கூத்து இற்றை நாளிலும் ஏற்றமொடு பாராட்டப்படுவதுண்டு. பெரும்பாலும் கிராமாந்தரங்களில் நடைபெறும் இவ்விழாக்கூத்து மக்களுக்கு மட்டில்லாத மகிழ்ச்சியைத் தந்து பொழுது போக்குக்குப் பேராதரவாய் இருந்துவருகிறது.

ii "கோடியர்" என்னுஞ் சொல் ஈண்டுக் கூத்தர்களேக் குறிக்கின்றது. வேடம்மாறித் தம்மைப் பொருத்தமான ஆடை அணிகளால் அலங்கரித்துக் (கோடித்துக்)கொண்டு கூத்தாடுமவர் எனத் தோன்றக் கோடியர் என்னுஞ்சொல் வழங்கியதாகக் கொண்டால் அது நாடகக்கூத்தாரைக் குறிப்பதன்று என்று மறுத்தற்கில்லே.

இதன் தொடர்பாகவே கோடியர் என்னுஞ்சொல் வழங்கும் வேறுநூல் அடிகளேயும் காட்டிப்பின்னர் மேல்தந்த புறப்பாட்டைத் தொடர்ந்து ஆராய்வோம்.

....................................நளிசினை
நறும்போது கஞலிய நாகுமுதிர் நாகத்துக்
குறும்பொறை நன்னாடு கோடியர்க் கீந்த
காரிக் குதிரை காரியொடு மலைந்த
ஓரிக் குதிரை ஓரி.

(சிறுபாணாற்றுப்படை: 107—111)

[நெருங்கிய கொம்புகளில், மணம்வீசும் மலர் நெருங்கிய, இளமைமிக்க, புன்னைமரங்கள் பொருந்திய குன்றுகளையுடைய நல்ல நாடுகளைக் கூத்தாடுவோர்க்குக் கொடுத்தவனும், காரி என்னும் குதிரையையுடைய காரி என்னும் அரசனுடன் போர்செய்த ஓரி என்னுங் குதிரையையுடைய ஓரி மன்னன்]

இது பரிசில் பெற்று வந்தானொருவன் அதுபெற வருவானொருவனுக்கு அது கிடைக்கும் இடத்தை அறிவிக்குமுறையில் ஓரிமன்னனைப் புகழ்ந்து கூறியதேயன்றி, வழிவருவானையாவது வழிப்படுத்துவானையாவது சுட்டுவதன்று. ஆகலான் ஈண்டு வழங்கிய கோடியர் நாடகக்கூத்தர் அல்லர் என மறுத்தற்கில்லை. இவ்வடிகளால் ஒருமன்னன் கோடியர் கூத்தைக்கண்டு நாடுகளையே பரிசிலாகத்தந்தனன் எனத் தெரிகின்றது.

இனிவரும் அடிகள் பரிசில்பெற வருவானையோ பெற்றுவந்தானையோ குறிப்பனவாதலால் அவன் அவிநயக் கூத்தனாதல் நாடகக் கூத்தனாதல் வேறு கூத்தனாதல் இருக்கலாம்.

பல்லியக் கோடியர் புரவலன்.

(சிறுபாணாற்றுப்படை: 125)

[பல இசைக்கருவிகளுடைய கூத்தரைக் காப்பாற்ற வல்ல நல்லியக் கோடன்]

பாடல்பற்றிய பயனுடை எழா அல்
கோடியர் தலைவ

[பொருநர்: 56—57]

[மிடற்றுப் பாடலைத்தொடங்கி எழும்பயன் அமைந்த யாழையுடைய கூத்தர்க்குத் தலைவனே]

என்பவற்றில் யாழுடனே பல வாச்சியக்கருவிகளை இக்கூத்தர்கள் கையாடினர் என்பதும், யாழ் என்னுங் குறிப்பினுனே பண்ணுடைய பாடல் வல்லார் என்பதும், உயர்தர இசைவல்லுவர் என்பதும் தெரிகின்றன.

> கடும்பறைக் கோடியர் மகாஅ ரன்ன
> நெடுங்கழைக் கொம்பர் கடுவன்
> (மலைபடுகடாம்: 236—37)

[நெடிய மூங்கலின் கவடுகளில், கடிய பறையினையுடைய கூத்தாது பிள்ளைகளையொத்த, குரங்கு]

இவ்வடிகளால், கூத்தர்கள் தண்ணுமை என்னும் தோற்கருவியுடையார் என்பதும், அவர்களது பிள்ளைகளை குரங்குக் குவமை கூறியது, அதுபோலும் கண்டதைக் கண்டவாறு செய்யவல்ல ஆற்றல் உடையார் என்பதும் தெரிகின்றன.

iii "முறைமுறை, ஆநேர்கழியும் இவ்வுலகம்" என்ற நல்லுரை, கோடியர் நீர்மையைப் புலப்படுத்துகின்றது. கூத்தர்கள் தமது ஆடுகளத்தில் பல்வேறு உருவோடு தோன்றுவதும், அதனின்றும் மறைவதும்போலும், மக்கள், உலகத்தில் பிறப்பதும் இறப்பதுமாக இருக்கின்றனர் என்ற பொருள் போற்றத்தக்கது.

உலகத்தையே ஒரு நாடகசாலையாகவும், அதன் கண்வாழும் மக்களை நடர்களாகவும், அவர்கள் பிறப்பிறப்பை, அரங்கமேடையின் கண் கூத்தர்கள் வருவதும் போவதுமாகவும் கற்பித்திருப்பது, பிறமொழிப்பாவலர் ஒருவரது பொன்மொழிகளை நினைவுகூர வைக்கின்றது.

ஆங்கில நாடக மகாகவி ஷேக்ஸ்பியர் தமது As you like it (விரும்பிய விதமே) என்னும் நாடகத்தில் பின்வருமாறு கூறுகின்றார்.

> All the world is a stage
> And all the men and women merely players;
> They have their exits and their entrances
> And one man in his time plays many parts,
> His acts being seven ages.

ஆடரங் கதுவே ஆர்கலி உலகம்
ஆடவர் பெண்டிர் அனைவரும் நடரே
வருதலும் போதலும் மற்றவர்க் குண்டாம்
ஒருமகன் ஒருமகள் உளநாள் அளவும்
பற்பல வேடம் பொற்புட னுற்றுவர்
ஏழங்க வாழ்க்கை நூலங்க முடையது.

காஸ்டன் பாரிஸ் (Gaston Paris) என்னும் பெரியார் இக் கருத்தினையே சிறிது மாற்றிப் பின்வருமாறு கூறுகின்றனர்.

"இந்தப் பிரபஞ்சம் ஒரு பெரிய அரங்கமேடை. அங்கு நடைபெறுவது என்றும் முடிவு பெறாத நாடகம் ஒன்று. அதில் அழுகையும் ஆநந்தமும் ததும்பும். மக்கள் தேவர் நரகர் அந்நாடகத்து நடிகர்கள். நாடகம் இவ்வாறு முடியப்போகின்றதென்று சூத்திரதரனாகிய இறைவனுக்குத்தான் தெரியும். ஒவ்வொரு களமும், வளமும் நுணுக்குறுமுளமும் வாய்ப்ப விளங்கும்.

(தொடரும்)

பண்டிதர், S. அய்யாசாமி பிள்ளை.

# குவட்டாவில் பூகம்பம்.

## 1935-ம் ஆண்டு மே-மீ 31-தேதி இரவு 3-மணி

நம்நாட்டின் வடமேற்குப் பிராந்தியத்திலுள்ள பிரிட்டிஷ் பலுசிஸ்தானத்தின் தலைநகர் எனப்படும் குவட்டா நகரத்தில் நிகழ்ந்துள்ள பூகம்பம் மக்கள் மனதைக் கலக்கிவிட்டது. இந்நகரம் 1931-ம் ஆண்டு ஜனசங்கைக் கணக்கின்படி 60,000 மக்களைக்கொண்டது. இது கடல்மட்டத்திற்குமேல் 5,500 அடி உயரத்தில் உள்ளது. துறைமுகமாகிய கராச்சி நகரத்திற்கு 530 மைல் தூரத்திலுள்ளது. நாலாபக்கங்களிலும் சிங்காரத் தோட்டங்களால் சூழப்பட்டு மிகவனப்பு வாய்ந்த ஓர்நகரம். இங்கு 3 ஆங்கிலப் பட்டாளங்களும் இரண்டு இந்தியப்பட்டாளங்களும் வைக்கப்பட்டிருந்தன.

இந்திய விமானப்படையின் தலைநகராய் இருந்தது. இது எல்லைப் புறத்தில் ஓர் முக்கிய பட்டணமாம். 3/4 நிமிடத்தில் அதாவது 45 செக்கண்டில் இப்பெரியபட்டணம் மண்ணிற்குள் இருந்த இடம் தெரியாமல் புதைந்துவிட்டது, **30,000** மக்களுக்குமேல் உயிர் நீத்தனர். பல்கோடிக் கணக்கான பொருள்கள் நஷ்டமாயின, என்றால் இயற்கையின் சக்தியை என் என்று இயம்புவது. மனிதன் தன்னுடைய சாஸ்திர அறிவின் ஆற்றலால் பஞ்சபூதத்தை வென்று வருவதாகக் கொள்ளும் கர்வத்தைக்கண்டு இயற்கை எள்ளிநகையாடுவதாக இச்சம்பவம் காண்கின்றது. நம் கொங்குமலரில் முதல் மலர் 1, 2, 3 இதழ்களில் பூகம்பம் நிகழ்வதன் காரணங்களைப்பற்றி விளக்கியுள்ளோம். நம் நாடும், மக்களும் இதனால் அனுபவித்துள்ள துன்பங்கள் எட்டில் அடங்காது. ஈண்டு இக்கஷ்டங்களை விரிக்கிற் பெருகும் என அஞ்சி விடுக்கின்றோம்.

பூகம்பம் புது நிலப்பரப்புக்களிலும், புதுமலைகளை அடுத்த பிரதேசங்களிலும் நிகழக்கூடியது. பூமியின் மேற்றோடு மடிந்து சுருங்கும்போதும் மேற்றோடு இறுகி அதற்கு அடுத்த அடுக்கு வரிசையில் ஸ்தரப்படும் போதும் பூமியின் அச்சு அசைந்து தன்னிலை மாறும்போதும் இப்பயங்கரமான நிகழ்ச்சி ஏற்படுகிறது இவ்வாறு பூமியின் அச்சுமாறுவதால் (Axis Variation) ஏற்படும் அதிர்ச்சியை நம் பண்டைப்பெருமக்கள் ஆதிசேஷன் தோள் மாற்றுவதால் ஏற்படும் அதிர்ச்சி என்றனர் போலும்.

---

The forces are due to the periodically shifting axis of rotation.

The axis of rotation of the earth does not remain in the same position but oscillates about its mean position.

Prop Rudolf Spitaler

"Hindu" I, June, 1935.

இமயமலை ஓர் இளமலையாம். இமயமலையும், இதன் பிரிவாகிய சுலைமான், கிருதார் மலைகளும் பலுசிஸ்தானமும் புது நிலப்பரப்பில் உளது. இவைகள் பூகம்பமண்டலத்தில் இருக்கின்றன. இம்மண்டலத்தில் பூகம்பங்கள் நிகழ்தல் இயற்கையே. குவட்டாவில் சிறு பூகம்ப அதிர்ச்சிகள் சிலகாலமாகவே காணப்பட்டு வந்தது. இதைக் கணக்கிட்ட ஞாலநூல் அறிஞர்கள் குவட்டாவில் பயங்கரவிபத்து நேரிடும் எனக் கூறிவந்தனர்.

நம் தமிழ்நாட்டில் பண்டையில் மிக மிகக்கொடிய பூகம்பங்கள் பல நிகழ்ந்துள்ளன. இயற்கையின் பயங்கரமான கொடிய செயலால் நம் தமிழ்நாட்டின் பெரும்பகுதி முன்னர் அழிவுற்றது. இத்தகைய செயலால்,

> ''ஏரண முருவம் யோகமி சைக்கணக்கி தஞ்சாலம்
> தாரண மறமே சந்தந் தம்பநீர் நிலமுலோகம்
> ஆரணம் பொருளன் றின்னமான நூல்யாவும்வாரி
> வாரணங் கொண்டதந்தோ வழி வழிப்பெயருமரே.''

இத்துடன் தமிழ்நாடு சின்னா பின்னமாக்கப்பட்டு சீர்குலைந்தது. ஆனால் இதுகாலை தமிழ்நாடு ஸ்தரப்பட்டுவிட்டது. இனி தமிழ்நாட்டில் (நாம் முதல் மலரில் குறிப்பிட்டுள்ளபடி) இத்தகைய கொடிய பூகம்பங்கள் நிகழாது என ஞானநூல் அறிஞர்கள் கூறுகின்றனர். சிறு அதிர்ச்சிகளும் மற்ற இடங்களில் நிகழும் பூகம்பத்தின் தாக்குதலின் எதிர் ஒளிகளும் இங்கு காணப்படுமே ஒழிய, கொடிய நிகழ்ச்சிகள் பண்டைத் தமிழகத்தின் அதாவது, குமரிக் கண்டத்தின் (Gondwana Continent) எஞ்சிய பகுதியாகிய இத் தமிழ்நாட்டில் ஏற்படாது என நிச்சயமாய் கூறலாம்.

S. நடராஜன் B. A.,

சிவமயம்.

# சமயப் பகுதி.

## பேரூர் அரசம்பலவாணர் சன்னதிமுறை
## விண்ணப்பப் பதிகம்.

காப்பு

வெண்பா.

மன்னுந் திருப்பேரூர் வாழும் பெருமானர்
பன்னு மரசம் பலவாணர்—சன்னதியில்
இட்ட முறையீ டிசைப்பித்து வென்றிதரும்
பட்டிக் கணேச பதி.

1. திருமேவு ஞானமுஞ் செல்வமுங் கல்விச்
சிறப்பு நல்குந் துணைவியிற்
சேர்ந்து நன்மக்களும் பெற்றுவாழ்வீர் வெள்ளி
செம்பொன் மலையுங்கைக் கொள்வீர்
உரைமேவு நீரொரு வரேபதி யெவர்க்குமென
வோது நடராச னென்ற
ஒப்பரிய பேரும் படைத்துளீர் உமைநாடி
யுறுகின்ற பேர்க ளெல்லாம்
ஒருவாது பலவாறு புவிமேல் வழக்கற
உளுற்று கின்றது முண்மையே
ஒன்று தண்டமுமுளீர் அண்டினோர்க் கும்மைநீ
ருதவு கருணைச் செம்மலென்
றருகாக வந்துபுக லெளியனேன் முறைவின
யருள்க பேரூரினூம்
அருகினம் பிகைகாண வருள்நடம் புரிஞான
வரச வம்பல வாணனே.

2. கன்னங் கறுத்த இருளப்பன் முதலெதிரியென்
கண்பொத்தி யுணர் வொழித்தான்
காட்டு சகசால மாயாண்டிபின் வந்தெனது
கண்சற் றநோக்க விடினும்
தன்னரிய வலியெலாங் காட்டிநான் பலவாறு
தத்தளிக்கச் செய்தனன்
சார்ந்தகருமன் செயுந்துன்ப மெல்லாஞ் சொலுந்
தரமல்ல விம்மூவரால்
என்னரிய நாயகர்க் கெனவைத்த வன்புநிதி
யெல்லா மிழந்து கெட்டேன்.
ஈதெனது விண்ணப்ப மிவர்தமை விசாரித்
தெனின்னல் களைவீர் தஞ்சம் யான்
அன்னநிரை சூழ்காஞ்சி மாநதிப் பேரூரி
லமரு மமரர்களுதனே
அருகினம் பிகை வருள்நடம் புரிஞான
அரசவம்பல வாணனே.

3. மனமென்னு மொருதுணைவ னென்னோடு பிரியாது
மருவ நாடோறும் வாழ்பவன்
வாஞ்சையா லவனேவல் வழிநடந் திடலன்றி
மாறொன்று கூறியறியேன்
எனதுவாழ் வெல்லா மவன்கையி லொப்புவித்
திட்டு நெடுநாள் நம்பினேன்
என்சொல்வ தைய அப்பாழ்த்த பாவிக் கொடியன்
ஏய்த்தென்னை யுட்பகைவனாய்த்
தனது சொற்படி நடக்கின்ற தொண்டாக்கிச்செய்
சஞ்சலங் கொஞ்சமலவே
தாங்களே மீட்டுடன் சுதந்தரம் வாங்கித்
தரப்பெரிதும் வேண்டுகின்றேன்
அனகர் வழிபட்டு வீடடைய வருள்முத்திநக
ராயபேரூர்ப் பிரானே
அருகினம்பிகை வருள் நடம்புரிஞான
அரசவம்பல வாணனே.

4. கண்ணைய ஞசியப்பன் நாவண்ணன் சொலக்
காட்டு செவி யோனுற்றினேன்
காமன் குரோதன் லோபன் மோகன்மதனோடு
கருது மாற்சரிய னிவர்கள்

சிவமயம்.

# சமயப் பகுதி.

## பேரூர் அரசம்பலவாணர் சன்னதிமுறை விண்ணப்பப் பதிகம்.

---

காப்பு

வெண்பா.

மன்னுந் திருப்பேரூர் வாழும் பெருமானுர்
பன்னு மரசம் பலவாணர்—சன்னதியில்
இட்ட முறையீ டிசைப்பித்து வென்றிதரும்
பட்டிக் கணேச பதி.

1. திருமேவு ஞானமுஞ் செல்வமுங் கல்விச்
சிறப்பு நல்குந் துணைவியிற்
சேர்ந்து நன்மக்களும் பெற்றுவாழ்வீர் வெள்ளி
செம்பொன் மலையுங்கைக் கொள்வீர்
உரைமேவு நீரொரு வரேபதி யெவர்க்குமென
வோது நடராச னென்ற
ஒப்பரிய பேரும் படைத்துளீர் உமைநாடி
யுறுகின்ற பேர்க ளெல்லாம்
ஒருவாது பலவாறு புவிமேல் வழக்கற
உஞற்று கின்றது முண்மையே
ஒன்று தண்டமுமுளீர் அண்டினோர்க் கும்மைநீ
ருதவு கருணைச் செம்மலென்
றருகாக வந்துபுக லெளியனேன் முறைவினு
யருள்க பேரூரினுளும்
அருகினம் பிகைகாண வருள்நடம் புரிஞான
வரச வம்பல வாணனே.

2. கன்னங் கறுத்த இருளப்பன் முதலெதிரியென்
கண்பொத்தி யுணர் வொழித்தான்
காட்டு சகசால மாயாண்டிபின் வந்தெனது
கண்சற் றநோக்க விடினும்
தன்னரிய வலியெலாங் காட்டினான் பலவாறு
தத்தளிக்கச் செய்தனன்
சார்ந்தகருமன் செயுந்துன்ப மெல்லாஞ் சொலுந்
தரமல்ல விம்மூவரால்
என்னரிய நாயகர்க் கெனவைத்த வன்புநிதி
யெல்லா மிழந்து கெட்டேன்.
ஈதெனது விண்ணப்ப மிவர்தமை விசாரித்
தெனின்னல் களைவீர் தஞ்சம் யான்
அன்னநிரை சூழ்காஞ்சி மாநதிப் பேரூரி
லமரு மமரர்கணுதனே
அருகினம் பிகை வருள்நடம் புரிஞான
அரசவம்பல வாணனே.

3. மனமென்னு மொருதுணைவ னென்னோடு பிரியாது
மருவ நாடோறும் வாழ்பவன்
வாஞ்சையா லவனேவல் வழிநடக் திடலன்றி
மாறொன்று கூறியறியேன்
எனதுவாழ் வெல்லா மவன்கையி லொப்புவித்
திட்டு நெடுநாள் நம்பினேன்
என்சொல்வ தைய அப்பாழ்த்த பாவிக் கொடியன்
ஏய்த்தென்னை யுட்பகைவனுய்த்
தனது சொற்படி நடக்கின்ற தொண்டாக்கிச்செய்
சஞ்சலங் கொஞ்சமலவே
தாங்களே மீட்டுடன் சுதந்தரம் வாங்கித்
தரப்பெரிதும் வேண்டுகின்றேன்
அனகர் வழிபட்டு வீடடைய வருள்முத்திநக
ராயபேரூர்ப் பிரானே
அருகினம்பிகை வருள் நடம்புரிஞான
அரசவம்பல வாணனே.

4. கண்ணைய னுசியப்பன் நாவண்ணன் சொலக்
காட்டு செவி யோனூற்றினேன்
காமன் குரோதன் லோபன் மோகன்மதனோடு
கருது மாற்சரிய னிவர்கள்

எண்ணம் யாதோ அறிகிலேன் செற்றம்வைத்தென்று
மென்னகத்தே குடியிருப்
பெய்தியும் நன்றிசற்றேனு மெண்ணுமலெனை
எத்திமனமாம் பெட்டகத்
துண்ணண்ணு மன்புதயை பொறைஞானவைராக்ய
மோங்கு நல்லற முதலவா
மொண்மணிகளைக் களவு கொண்டு கைகாலோடுடன்
ஒட்டாண்டி யாக்கிவிட்டார்
அண்ணலே இத்தீயர்தமை யொறுத்திடுகவா
ணணிமதிற் பேரூருளாய்
அருகினம்பிகை காண அருள் நடம்புரிஞான
அரசவம்பல வாணனே.

5\. என்புகல்வ தநியாயம் இருளிடம் விட்டுநா
னினிய நெறிசெல்ல வெண்ணி
எட்டியடி வைக்கவேநாத்திக னெனுங் கொடியன்
ஏகிடா வகை மறித்தான்
வன்புபல பேசி மாயாவாதி
வைணவன் வைத்த புத்தன் சாங்கியன்
வஞ்சப் பாசண்டினன் வைரவன் காபாலி
வைசேடிகன் முதலினோர்
துன்பப் படற்கு வெவ்வேறு வழிகாட்டியே
சூழ்ந்து நிலை பெறவிடாது
சுற்றிச் சுழற்றி என்வாழ் நாளெனும் பெரிய
சுடர்மணியை வாய்க் கொண்டனர்
அன்புநெறி சேரவவர் அல்லல்களை களைத்திடீர்
அமல பேரூர் நகருளாய்
அருகினம்பிகைகாண அருள் நடம்புரிஞான
அரசவம் பல வாணனே.

(தொடரும்)

—வித்வான் வரதநஞ்சைய பிள்ளை.

# பெரிய புராணஉரை வெளியீடு.

## கோவைத் தமிழ்ச் சங்கப்பதிப்பு.

இதுபற்றி முன்னமே விளம்பரம் செய்திருந்தபடி நாளது யுவ-ஷ வைகாசி-மீ 23-உ (5—6—35) புதன்கிழமை யன்று மாலை கோவை வழக்கறிஞர் சைவத்திருவாளர், C. K. சுப்பிரமணிய முதலியார், B. A., அவர்கள் இயற்றிய உரையுடன் இப்பதிப்பு முதற்சஞ்சிகை சிதம்பரத்தில் ஆயிரக்கால் மண்டபத்தில் கூடிய பெருஞ்சபையில் வெளியிடப்பெற்றது. அன்றுகாலை ஸ்ரீ நடராசருக்கும் ஆசாரியமூர்த்திகள் நால்வருக்கும் விசேட பூசைகளும் திருவாளர்கள் தியாகராஜ பிள்ளை, சிவஞானம் பிள்ளையவர்களால் சிறப்பாய் திருப்பாவாடையும் நடைப்பெற்றன. அன்று பகலில் திருக்கழிப்பாலை ஸ்ரீ சி. ப. முதலியார் அவர்கள் தேவார பாடசாலையில் ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகளுக்கு விசேட பூசையும், அவரது சரித புராணப்பிரசங்கமும், மகேசுவர பூசையும் விமரிசையாய் நடைபெற்றன. ஸ்ரீ முதலியாரவர்கள் சேக்கிழார் சுவாமிகள் புராணத்தை யாவரும் ஆனந்திக்குமாறு எடுத்து உபந்நியசித்தார்கள். மாலை ஆயிரக்கால் மண்டபத்தில் முன்னமே விளம்பர மூலம் அறிவித்திருந்தபடி, ஸ்ரீ சபாநாயகர் கோயில் பொது தீட்சிதர்கள் அன்பாக உத்தரவு கொடுத்தபடி மகாசபை கூடிற்று. சீகாழி விருத்தாசலம் திருவாவடுதுறை முதலிய பல தலங்களிலிருந்தும் பல அன்பர்களும் பெரியோர்களும் வித்வான்களும் வந்திருந்தார்கள். சபையிலே தில்லைவாழ்ந்தணர்களாகிய தீட்சிதர்கள் பலரும் பிரசன்னமாக வீற்றிருந்தது சபைக்கு மிகப் பொலிவுதந்தது. சிதம்பரத்திலே உள்ள பல மடாதிபதிகள் தம்பிரான்சுவாமிகள் வித்வான்கள் முதலிய பெரியோர் பலரும் அன்புடன் கூடியிருந்தார்கள்.

வித்வான் ந. சிவப்பிரகாச குருக்களையா அவர்கள் பிரேரேபணையின்படி பிரமஸ்ரீ சி. சச்சிதானந்த தீட்சித சுவாமிகள் சபாநாயகராக வீற்றிருந்தனர். தேவார பாராயணத்துடன் சபை தொடங்கப்பெற்றது. சபாநாயகர் ஸ்ரீ முதலியாரவர்களை முதலில் தமதுஉரை வெளியீட்டைப்பற்றிப் பேசி உரையை வெளியிடும்படி ஆணையிட்டனர். ஸ்ரீமத் திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதினத்திலிருந்து இதற்காக உரை ஆசிரியருக்கு சன்மானங்கள் காரியஸ்தர் ஓதுவாமூர்த்திகளுடன் அனுப்பப்பெற்றிருந்து அதனை தொடக்கத்திலேயே ஷை ஆதினம் சிவஞானத் தம்பிரான் சுவாமிகள் ஸ்ரீ முதலியாரவர்களுக்கு ஷை மடத்தின் சார்பாக அளித்துப் பட்டுப் பீதாம்பரம் போர்த்து ஆசீர்வதித்தார்கள். அதன்பின் ஸ்ரீ முதலியாரவர்கள் சுமார் $1\frac{1}{2}$ மணிநேரம் தமது உரை

வெளியீட்டைப்பற்றிக் கேட்டோர் யாவரும் மகிழும்படி உபந்நிய சித்தார்கள். தாம் இதில் முயன்ற காரணங்களையும் இப்புராணத் தில் தாம் ஈடுபடநேர்ந்த தமது 35 வருடங்களின் அனுபவங்களை யும் கூறினர். இப்புராணத்திற்கு "உலகெலாம்" என்று தொடங் கும் முதற் பாட்டுக்கு விரிவான ஒரு உரை உபந்நியசித்த தும் பிறவும் சபையாரை மிகவும் மகிழச்செய்தது. எல்லாருக்கும் தம் நன்றியைச் செலுத்தியபின் திருவாவடுதுறை ஆதினத்தாருக் கும் தமக்கும் உள்ள குரு சிஷ்ய பரம்பரையைக் குறித்துக்காட்டி அவர்களுக்கும் வணக்கம்செய்து வெளியீட்டுப் பிரதிகளை பொது தீட்சிதர் சபைக்கும், பூசைமுறை தீட்சிதர்க்கும் அங்கு எழுந்தரு ளிய தீட்சிதர்களுக்கும் வழங்கினர். அதன் பின்னர் இவ்வெளி யீட்டின் சிறப்புக்களைப்பற்றி சிதம்பரம் பச்சையப்பன் கலாசாலை தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ தர்மலிங்கம் பிள்ளை அவர்கள், சென்னை திரு. R. ஷண்முகசுந்தரம் செட்டியார் அவர்கள், சிதம்பரம் இராமலிங்க ஓதுவார்மூர்த்திகள், விருத்தாசலம் வித்வான் திரு. பெரியசாமி பிள்ளை அவர்கள் முதலிய பெரியோர் பாராட்டிப்பேசி வாழ்த்தினர். அதன்பின் சபாநாயகர் தமது முடிப்புரையில் வெளியீட்டைப்பற்றித் தமது ஆதரவான ஆசீர்வாதங்களை எடுத் துக்கூறிச் சபையை இனிது பூர்த்திசெய்தனர். சபாநாயகருக்கும் சபையோருக்கும் வந்தனங்களுடன் சபை கலைந்ததும் உடனே ஸ்ரீ நடராசருடைய திருஅத்தயாம தரிசனத்துடன் பூர்த்தியா யிற்று. சபை பூர்த்தியிலே அவ்விடத்திலேயே பல அன்பர்கள் சஞ்சிகைப் பிரதிகளை ஆவலுடன் விலைக்குப் பெற்றுக்கொண்டார் கள். ஷெ வெளியீடு ராயல் 8 பக்கம்கொண்ட அளவில் 96 பக்கங் களில் ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள் படம் (1) சிதம்பரப்படம் (2) ஆகமூன்று படங்களுடன் மிக அழகாக விளங்குகிறது. ஸ்ரீ முதலி யாரவர் இவ்வெளியீட்டை சஞ்சிகை 1-க்கு 160 பக்கம் (20 பாரங் கள்) கொண்டதாய் 12 சஞ்சிகைகளில் பூர்த்தி செய்வதாய் உத்தே சித்துள்ளார்கள். 2-வது சஞ்சிகை வெளிவருவதற்குள் முன் பண மனுப்பிப் பதிவு செய்வோர்க்குச் சஞ்சிகை 1-க்கு தபால் கூலியின்றி 1 ரூபாயாகவும் பின்னர் 1—4—0 ரூ. ஆகவும் விலை குறித்துள் ளார். கூடியவிரைவில் வெளியீடு இனிது நிறைவேறித் தமிழு லகுக்குப் பயனுகுமாறு கடவுளை வணங்குகிறேன்.

D. ஆறுமுகம்பிள்ளை.

# ஆராய்ச்சிப் பகுதி.

## குன்றுதோறாடல்.

### குருடிமலை.

கோயமுத்தூர் ஜில்லாவின் மேற்புரத்தில் மேற்குத் தொடர்ச்சிமலை எல்லையாகஇருக்கின்றது. அம்மலைத்தொடர்ச்சியில் ஆங்கத்காங்கு பல பள்ளத்தாக்குகள் உண்டு. அவைகளில் ஒன்று தடாதுப் பள்ளத்தாக்கு என்பது. அப்பள்ளத்தாக்கின் வடபுறமாக ஒரு உயர்ந்த மலைத்தொடர் உண்டு. அம்மலைத்தொடர்தான் குருடிமலைத் தொடர்.

இம்மலைத் தொடரில் பல சிகரங்கள் உண்டு. அவற்றில் அதிக உயரமானது நாடுகண்ட போளி என்றபெயர்கொண்டது. அதற்கு அடுத்தாற்போல் இரண்டு சிகரங்கள் உண்டு. இம்மூன்றும் அடுப்புக் கற்கள் போல் நிற்கும். இம்மூன்றும் நீர்மட்டத்திற்கு 6000 அடிக்குமேல் உள்ளன. இச்சிகரங்களின் கீழ் ஒரு பீடபூமிபோன்ற பாகம் இருக்கிறது. அதில் இரங்கப்பன் கோயில் என்ற ஒருசிறு கோயில் உண்டு. அதற்கருகில் ஒரு அழகான நீர்அருவி ஓடுகின்றது. இக்கோவிலுக்குப் புரட்டாசி மாதம் சனிக்கிழமைகள்தோறும் கிராமத்தார்கள் போவதுண்டு. இச்சமவெளியில் சுமார் 80 வருஷங்களுக்கு முந்தி இந்த ஜில்லா கலக்டராயிருந்த வெட்டர்பர்ன் என்பவர் ஒரு காப்பித்தோட்டம் ஏற்படுத்தினர். அது இப்போது அழிந்து நிற்கிறது. அவர் கட்டின பங்களாவின் சுவர்கள் மாத்திரம் இருக்கின்றன. இக்கோயிலின் அருகில் இயற்கை அழகு மிகவும் அற்புதமாக இருக்கிறது. சரக்கொன்றை மரங்களில் மஞ்சள் பூக்கள் சரம் சரமாகத் தொங்கும். சாரல்களில் எலுமிச்சம் புல்லும் கணப் புல்லும் மனிதனை முழுக்கிவிக்கும் உயரம் வளர்ந்து நிற்கும். ஆயிரக்கணக்கான காட்டுமரங்கள் ஆகாயத்தை அளாவி நிற்கும் பகற்காலங்களிலும் பெரிய கடமான்கள் எதேச்சையாய் உலாவி ஓடும். இவ்விதமான இயற்கை அழகின் நடுவில் ஒரு சிறிய கூறை

மேய்ந்த ஆலயம் இருக்கின்றது. அதில் மூலஸ்தானத்தில் இருப்பது லிங்கம்போன்ற உருவம். அதற்கு ஒரு நாமத்தைச்சார்த்தி அதனை இரங்கப்பன் என்று வழிபடுகிறார்கள். அருணகிரிநாதர் பாடிய குருடிமலைக் குமார இவ்வாலயத்துக் கடவுளோ என்பது ஒரு கேள்வி.

இம்மலைத்தொடரில் இக்கோயிலுக்குக் கிழக்குப்பாகத்தில் ஒரு கல் தூரத்தில் உள்ள ஒரு சிகரத்திற்கு லேம்டன்ஸ்பீக் (Lambton's peak) என்ற பெயர் கொடுத்திருக்கிறார்கள். இந்நாட்டின் மலைகளின் உயரங்களை கணிக்கையில் லேம்டன் என்பவர் இச்சிகரத்தின் உயரத்தை அளந்ததினால் அவர் பெயர் இதற்கு ஏற்பட்டது. இதன் உயரம் 6000 அடிக்குமேல் இருக்கிறது. இச்சிகரத்திற்கு மேற்கே மல்லாண்டை, சுவத்துப்பாறை, பில்வழி என்ற சிகரங்கள் உண்டு. இவைகளில் மல்லாண்டைப்பாறை வெகுதூரத்திலிருந்து தெரியும். இதனைக் கடவுளாகக்கொண்டு வயல்களில் அறுவடை ஆனவுடன் மல்லாண்ளைடைப்போல் ஒரு உருவம் செய்து அதற்கு பூஜைசெய்து விட்டுத்தான் நெல்லை அளப்பது இந்நாட்டார் வழக்கம்.

இம்மலையின் அடிவாரத்தில் இரண்டு ஊற்றுகள் உண்டு. மேற்கில் உள்ளதற்கு மண்பாவி என்று பெயர். இதில் எக்காலத்திலும் நீர் வற்றுவதில்லையாம். மற்றொன்று பொன்னூற்று என்பது. இது ஒரு இனிய சிறிய நீர்வீழ்ச்சி. ஒரு ஆண்டில் ஆடிமாதம் முதல் மாசிமாதம் வரையில் எப்போதும் நீர் விழுகும். மிகத்தெளிந்த நீர் ஒரு பெரும் பாறையின் மீதிருந்து கீழேவிழும். அப்பாறையின் அடியில் ஒரு குகை உண்டு. அக்குகையில் பொன்னூற்றம்மன் சிலை உண்டு. அம்மனுக்குப் பின்னால் குகைக்குள் 3 அடி ஆழமுள்ள அழகிய நீர்நிலை இருக்கிறது. அதில் கற்பூரம் ஏற்றினால் மிதந்து கொண்டே எரியும். நீர்வீழ்ச்சியில் முழுகுவதற்கு ஏராளமான ஜனங்கள் புண்ணியகாலங்களில் செல்வார்கள். கோவையிலிருந்து விடுமுறை காலங்களில் இவ்விடத்திற்கு உல்லாசமாக வீழ்ச்சியில் முழுக மக்கள் போவதுண்டு. அவ்விடத்தில் இயற்கை அழகு மிகவும் அற்புதமானது.

இக்குருடிமலைக்கு அருணகிரிநாத சுவாமிகள் ஒரு அழகிய திருப்புகழ் பாடியிருக்கிறார்கள். அது அடியிற் கண்டபடி:

கருடன்மிசைவரு கரியபுயலென
கமலமணியென வுலகோரைக்-
கதறியவர்பெயர் செருகிமனமது
கருதிமுதுமொழி களைநாடித்;
திருடியொருபடி நெருடியறிவிலர்
செவியில் நுழைவன கவிபாடித்-
திரியுமவர்சில புலவர்மொழிவது
சிறிதுமுணர்வகை யறியேனே-
*வருடையினமது முருடுபடுமகில்
மரமுமருதமு மடிசாய.
மதுரமெனுநதி பெருகியிருகரை
வழியவளைகவளை குதிபாயும்
குருடிமலையுறை முருககுலவட
குவடுதவிடெழ மயிலேறும்-
குமரகுருபர திமிரதினகர
குறைவிலிமையவர் பெருமாளே;

(தொடரும்)

—கோவைக்கிழார்.

# ஒழிபு.

## கன்னட தேசத்தின் ஹொய்சள அரசர் ஆலயங்களின் சிற்ப விசேடங்கள்.

---

## பேளூர் ஸ்ரீ சென்ன கேசவப்பெருமாள் ஆலயம்.

---

(65-பக்கத் தொடர்ச்சி.)

### கொலுக்கூடங்களும்—சித்திரங்களும்.

இங்குள்ள மகாமண்டபத்தின் வலது பாகத்தில் விஷ்ணுவர்த்தனனுடையவும், இடது பாகத்தில் முதலாம் நரசிம்மனுடையவும் கொலுக்கூடங்கள் இருக்கின்றன. இவ்விரண்டு கொலுக்கூடங்களிலும் கூட ஒன்பது திரைகள் சித்திரத்தூண்களில் சேர்த்து நிறுத்துப்பட்டிருக்கின்றன. இத்திரைகளில் ரேகைவடிவு (அவுட்லயின்) களிலும், செதுக்குவகைகளிலும், கொத்துமுறைகளிலும் பற்பல சித்திரங்கள் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. திரைச்சீலைகளின் நாற்புர விளிம்புகளிலும் நடுமையத்திலும் பற்பல கொடிவகைகள் நேர்த்தியாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன. நடுவட்டங்களில், நரசிம்மாவதாரம்—பலிச்சக்கரவர்த்தி வரலாறு, காளிங்கநர்த்தனம், க்ஷீரசாகர மதனம், பாற்கடல்கடைதல், கம்சவதம் கருடகருவபங்கம், (கருட அநுமயுத்தம்) இரங்கநாதர்பள்ளி, பிரகலாதன் சரித்திரம், முதலிய திருமால் லீலைகளும் சிவன் நந்தி வாகனத்தில் எழுந்தருள்கையும், ஓவியங்களாகவும், சித்திரங்களாகவும் சிறப்பாகச் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் ரேகை வடிவுடைய சித்திரங்களும் கலந்துமிளிர்கின்றன.

மகாமண்டபத்தின்மேல் விதானமும், இரண்டாம் திருவாயில் நிலைவிமானமும், விஷ்ணுவர்த்தனனது பேரனை பல்லவ அரசனால் கி பி. 1173—1220-ஆம் ஆண்டில் திருப்பணி செய்விக்கப் பட்டது. இம்மகா மண்டபத்தில் நிறுத்தப்பட்டுள்ள சித்திரத் தூண்கள் அளவுக்கதிகமானவை. ஒருகால் பிற்காலத்தில் அரச குடும்பத்தினரால் புதிதாக அதிகத்தூண்கள் சேர்த்திருக்கவேண்டுமென யூகிக்க இடமிருக்கிறது.

பேளூர் ஸ்ரீ சென்னகேசவப்பெருமாள் கோவிலின் சிற்பக் காட்சிகளைக் கண்ணுற்ற ஆங்கில துரைமகனர் மிஸ்டர் பெர்கூஜன் என்பவர், அடியில் வருமாறு தமக்குத்தோன்றிய அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிருர் அது:—

"இந்தக்கோவிலில், கன்னடதேசத்து பூர்வீக சிற்பசாஸ்திரிகளுடைய சிற்பத்திறமைகளும், அவர்கள் அழகின் அவதாரங்கள் போல் அமைத்திருக்கும் அற்புத சிற்ப சிருஷ்டிகளும், அவைகளில் மின்னிப்பிரகாசிக்கின்ற சிற்பநுட்பங்களும், அவர்களுடையதிறமைகளுக்குச் சிறந்த உதாரணங்களெனலாம். பிரதான மண்டபம் பிரிக்க முடியாத அமைப்பில் நுட்பமான சிற்பத்திறமைகளில் அற்புதமான அழகில் ஆக்கப்பட்டிருக்கிறது. இச்சிற்ப நுணுக்கங்களையும், பல்வகை அமைப்புக்களையும், அழகுகளையும் கூர்ந்து கவனித்தால் அவற்றின் விசேடத்திறமைகளும், பிரகாசங்களும் தெற்றெனப்புலனுவதோடு அரிய காரியத்தைத்துணிந்து முடிக்கும் ஆற்றல் வாய்ந்தவர்களென்பதும் அறியலாகும். இத்தகைய உயர்வும், சிறப்பும், அழகும், அமைப்பும், அமைந்த சிற்பங்களையும், அவற்றை ஆக்கிய சிற்பாசரியர்களையும் வேறெங்கும் காணமுடியாது. இவ்வாலயத்தைச் சிற்பங்களுக்கும், சித்திரங்களுக்கும் வைப்பு நிதியாக விளங்கும்படி செய்துமுடித்த சிற்பவல்லார்கள் தேர்ந்த அறிவும், தெய்வசக்தியும், அபார புத்திநுட்பமும், நிதான குணமும் மிகுதியான அநுபவமும், அற்புத ஆற்றலும் வாய்ந்தவர்களென்பதே எனது அபிப்பிராயம். இவ்வாலயத்தின் மேலான அமைப்பும், அழகும் அலங்கார சம்பத்துக்கு உறைவிடமாகத்தோன்றுகின்றன. இதனை மீறிய அழகும் அமைப்பும் பிரபஞ்சத்தில் வேரெங்கும் காண்பது அரிதென்றே கூறலாம்" என்பது.

(தொடரும்.)

கோவை திரு சி. கு. நாராயணசாமி முதலியார்.

# "மாதவியானுல் மடிமேல்வா........"

(பதிப்புரிமை ஆசிரியரது)

---

எனக்கு வயது எழு. எங்களூர் திண்ணைப்பள்ளிக்கூடத்தில் குட்டியண்ண வாத்தியாரிடம் மூன்ரும் வகுப்பில் படித்துவந்தேன். எங்களூருக்குத்திருநெல்வேலியிலிருந்து நாடகக்காரர்கள் வருஷா வருஷம் வந்து, 10 நாள் ஒரு மாதம்வரை தங்கி நாடகம் நடத்திப் போவார்கள். அரிச்சந்திர நாடகம், வள்ளியம்மை நாடகம், நல்ல தங்காள் நாடகம், கோவலன் நாடகம் ஆகிய இவைகளை நடத்து வார்கள். அநேகமாய் மாசி பங்குனி மாதங்களில் தான் நாடகக் காரர் வந்து நாடகம் நடத்துவார்கள். ஊர்வெளியிடத்தில் மூன்று பக்கம் படல்களைக்கொண்டு மறைத்து ஒரு பக்கம் (முன்புறம்) திறந்து விடப்பட்ட ஒரு பந்தலில் நாடகம் நடக்கும். இப்பந்த லின் முன் மைதானத்தில் ஜனங்கள் உட்கார்ந்து நாடகம் பார்ப்பார் கள். பலதடவைகளில் நானும் நாடகம் பார்க்கப் போயிருக்கிறேன். ஆனுல் நாடகம் ஆரம்பித்த சிறிது நேரத்தில் தூங்கிப்போய்விடு வேன் பிறகு விழித்துப்பார்க்கும்போது எங்கள் வீட்டில் இருக்கக் காண்பேன். நாடகம் எப்போது முடிந்தது, நான் எவ்வாறு வீட் டுக்கு வந்தேன் என்பனவெல்லாம் மயக்கமாகவேயிருக்கும். அந்த நாடக பாத்திரங்களில் ஒருவர் ஞாபகம் மட்டும் இன்றும் தெளிவா கவேயிருந்து வருகிறது. அவர்தான் எல்லா நாடகங்களிலும் இன் றியமையாது தோன்றி எல்லார்க்கும் இன்பங்கொடுக்கும் கோமாளி. அவருடைய கோணக்குல்லாயும், பலகறைப்பற்களும் கற்ருழை மஞ் சியால் ஆன நீண்ட மீசையும் தொங்குதாடியும் முன்தள்ளிய தொந் தியும், இடுப்பில் கட்டிய எருத்து மணியும் கால் சதங்கையும், இன் றும் அன்று கண்டதுபோல், மனக்கண்முன் காட்சியளிக்கின்றன. அவனுடைய ஆட்டமும், சதங்கையின் ஆர்ப்பரிப்பும், வம்புந்தும்பு மான வார்த்தைகளும், கைகால் சேஷ்டைகளும், முகத்தின் கோர ணிகளும் எல்லோருக்கும் ஒயாச்சிரிப்பை யுண்டாக்கும்.

அவன் விநாயகபூஜை செய்வதும், விதூஷகனைக்கடவது என்று சாபம்? வரம்? பெறுவதும், சூத்திரதார் வருவதும், இவர்கள் பேசிக்கொள்வதும் மோஹினி மோஹினி ராஜன் வருவதும், கட்டியக்காரன் வருவதும், வரை, எனக்கு ஞாபகம் இருக்கும். இதற்குள்ளாக நான் நித்திரைக்கடலை எட்டிவிடுவேன். கண்கள் தாமாக மூடிக்கொள்ளும்; மனம் நிசப்தமான எல்லையற்ற நித்திரைக் கடலில் மிதக்க வாரம்பித்துவிடும். கட்டியக்காரன் வந்து கனத்த குரலில் "உஜார்! உஜார்!! ராசாக்க வாருங்கோ" என்று கட்டியங் கூறுகின்ற வெடித்த குரலோசை, நித்திரையென்னும் இன்பக்கடலில், குமுதனிட்ட குலவரைபோன்று விழுந்து பெரும் அலைகளைக் கிளப்ப, அந்த விநாடியில் திடுக்கென விழித்துக்கண்முன்தோன்றும் கட்டியக்காரனையும், அடுத்த விநாடியில் அடுத்துவரும் ராஜாதிராஜ, ராஜகெம்பீர, ராஜமார்த்தண்ட "மவாராசா" வையும் காண்பேன். மறுவிநாடியில் ராஜசபையை விட்டு என்தோணி நித்திரைக்கடலில் வெகுதூரம் சென்றுவிடும். பிறகு எவ்வளவு பெரிய அலைகள் எழும்பினாலும் தோணி கவிழாது. மறுநாட்காலைவரை கரைக்கு வராது

* * *

நல்ல வெய்யிற்காலம் மாசிமாதத்தில் ஒருநாள் பகல் இரண்டு மணியிருக்கும். பள்ளிக்கூடத்தில் ஆணும் பெண்ணுமாகச் சுமார் 30 பிள்ளைகள் இருந்தோம். எங்கள் பள்ளிக்கூடம் எங்களூர் மாரியம்மன் கோவில் சாவடியில் வைக்கப்பட்டிருந்தது. அதற்கு மூன்று பக்கங்களில் சுவர் உண்டு முன்புறம் சுவர், கதவு ஒன்றுமில்லை; திறந்தவெளி முன்வாசலில் பந்தல் உண்டு. இந்தப்பந்தலில் தான் நாங்கள் விளையாடுவதும், மகாநவமிகாலத்தில் கோலடித்துப் பழகுவதும் சுவர்களைச்சேர்ந்து மூன்று பக்கங்களிலும் பிள்ளைகள் வரிசையாய் உட்கார்ந்திருப்பார்கள். ஒரு வரிசையில் ஆரம்பிகளுக்கு முன்னால் மணல் பரப்பியிருக்கும். சாவடியின் முன்கோடியில், எங்களைப்போலவே, பனந்தடுக்கில் வாத்தியார் வீற்றிருப்பார். அவரையடுத்துச்சட்டாம் பிள்ளை இருப்பான். அதேவரிசையில் பெரிய பையன்கள் இருப்பார்கள். எதிர்வரிசையில் பெண்குழந்தை

கள் இருப்பார்கள். மத்தியானச்சாப்பாட்டுக்குப் போய்வந்ததும் வழக்கம்போல் பிள்ளைகள் எல்லோரையும் எழுதச்சொல்லிவிட்டு, வாத்தியார் வெற்றிலைபாக்கு மென்றுகொண்டிருந்தார். சிறிதுநேரத்திற்கெல்லாம் அப்படியே தூங்கிவிட்டார். சிறுகச்சிறுகச்சரிந்து சாய்ந்து, பின் நன்றாக நீட்டிப்படுத்து ஆழ்ந்த நித்திரையில் ஆழ்ந்துவிட்டார். வாத்தியார் எப்போது கண் அயர்வார் என்று காத்துக்கொண்டிருந்த நாங்கள் எல்லோரும் எழுதுவதை உடனே நிறுத்தி எங்களுக்கிஷ்டமான வேறு பல ஜோலிகளைக் கவனிக்கத்தொடங்கினோம். சிறிது நேரத்தில் வாத்தியார் நினைப்பே எல்லாருக்கும் மறந்துபோய் விட்டது.

தன் பக்கத்திருந்த சிறுவன் ஒருவனைக் கூப்பிட்டு ஏதோ ரகசியம் சொல்வதாகப் பாசாங்கு செய்து அவன் காது நிறையத் தன் வாயில் இருந்த உமிழ்நீரை ஊற்றினான் ஒரு குறும்பன். ஆள்காட்டி விரலாலும் கட்டைவிரலாலும் தன் மூக்கை அளந்துகொண்டு அடுத்தவன் மூக்கை அளப்பதாகச் சொல்லி அளப்பதுபோல் அவன் மூக்கை கிள்ளினான் ஒரு வம்பன். தூங்கித்தலையசைத்துக்கொண்டிருந்த ஒரு குழந்தையின் தலையில் குட்டுவைத்துச் சடேக்கென அப்புறந்திரும்பி ஒன்றும் அறியாதவன் போலிருந்தான் ஒரு துஷ்டன். புதிய எழுத்தொன்றை எழுதிக்காட்டுவதாகச் சொல்லி அடுத்த சிறுவனுடைய விரலைப்பிடித்து மணலில் அழுத்தித் தேய்த்து அழச்செய்தான் ஒரு துடுக்குக்காரன். பலகையில் "நான் ஒரு கழுதை" என்று எழுதி அடுத்தவனை உரக்க வாசிக்கச் செய்து சிரித்தான் ஒரு விநோதன். தோற்றவனுக்குக் குட்டு என்று பந்தயம் பேசிக்கொண்டு பலகையில்  இம்மாதிரி கோடு கிழித்து இலக்கம் போடுவதில் சண்டையிட்டுக்கொண்டனர் இரண்டு கணக்குப் பாடச்சிறுவர். ஐந்து விரல்களையும் சேர்த்துப் பிடித்துக்கொண்டு நடுவிரலைப் பிடிக்கும்படி வேடிக்கை செய்தான் ஓர் விசித்திரன். நடுவிரலில் சுண்ணாம்பினால் அடையாளம் செய்துகொண்டு, ஆள்காட்டி விரலையும் மோதிர விரலையும் மாற்றி மாற்றி நடுவிரலோடு சேர்த்துக்காட்டி அடையாளம் மாறுவதாகக்

கண்கட்டு வித்தை காட்டினன் ஒரு கெட்டிக்காரன். விகாரமான உருவம் வரைந்து கீழே வாத்தியார் என்று எழுதித் தன் நண்பருக்குக் காட்டி நகையூட்டினன் ஒரு சித்திரப்பிரியன். தன் புறங்கையில் அழுக்கைத் தேய்த்து அடுத்தவனுக்கு வாசனை காட்டினன் ஒரு ரஸிகன். "எல்லாரும் குதிங்காலில் குந்திக்கொண்டு உட்காருங்கள், ஒரு வேடிக்கை" யென்று சொல்லி இருபுறமும் உள்ள சிறுவரை மல்லாக்கத்தள்ளினன் ஒரு போக்கிரி. இன்னும் இது போல் எத்தனையோ திருவிளையாடல்கள் அந்தச் சிறிது நேரத்தில் நடைபெற்றன. இதற்குள், எச்சிற்பட்டவன், குட்டுப்பட்டவன், கிள்ளுண்டவன், தள்ளுண்டவன் முதலான ஏமாற்றப்பட்ட கூட்டத்தாரில் சிலர் அழுகவும், சிலர் பசாரிக்கவும், சிலர் குஸ்திக்குத் தயாராகவும், ஏமாற்றிய கூட்டம் ஏளனஞ்செய்து சிரிக்கவும், இரைச்சல் அதிகரித்துவிட்டது. அப்போது, பள்ளிக்கூடத்தில் 'சாது' என்று பெயர் வாங்கிய நான், என்று பெயர் வாங்கிய நான், என் சட்டைப்பையில் வைத்திருந்த ஒரு தீப்பெட்டியை எடுத்து அதில் வெகு அருமையாய்த்தேடி அடைத்துவைத்திருந்த பொன் வண்டை (நமது ஆசிரியர் சென்ற மாதத்தில் கொங்கு மலருக்கு விரும்பியழைத்த பொன் வண்டல்ல) நண்பர்களுக்குக் காட்ட எண்ணிப் பாதிப்பெட்டியை இழுத்துப் பொன் வண்டின் அழகிய தோற்றத்தைக் காண்பித்தேன். நண்பர்களுக்குண்டான ஆச்சர்யத்திற்கும் சந்தோஷத்திற்கும் அளவில்லை. எதிலும், பாதியைக் காட்டி மறைத்தால் ஆசை தூண்டப்பட்டு அதிகமாவது இயல்பு. கிடைத்தமட்டில் திருப்தியடையும் சுபாவமும் அரிது. முழுதும் பார்த்துவிடவேண்டும் என்னும் ஆசை அடங்குவதில்லை. ஒரு துஷ்டன், என் கையில் இருந்த தீப்பெட்டியின் உள்கூட்டை வெடுக்கென்று பிடுங்கிப் பொன் வண்டை மணலில் விட்டான். சிறை மீட்கப்பட்ட அவ்வண்டு ஜிவ்வென்று மேலே கிளம்பி எங்கள் தலைக்குமேல் பறக்கவாரம்பித்தது. வண்டைப் பறிகொடுத்த நான் எப்படியாவது அதைப் பிடித்து மீண்டும் பெட்டியில் அடைக்க வேண்டும் என்று ஆத்திரப்பட்டு எழுந்து, மேலே பறக்கும் வண்டைப் பார்த்துக்கொண்டே அதைத் தொடர்ந்து அதன்கீழ் சுற்றினேன். அது அங்குமிங்கும் வளைத்து எய்ப்புக்காட்டி முடிவில் பந்தல் பக்கமாக விர்ரென்று பறந்தது. அதைத் தொடர்ந்து அதன் பின்னால்ஓடிய நான், வழியில் நீளப்படுத்திருந்த வாத்தியார் மேல் தடுக்கி விழுந்தேன். விழுந்ததும், வாத்தியார் என்றறிந்து, பொன் வண்டையும், கீழேவிழுந்து அடியுண்டதையும் மறந்து, என் இடத்திற்குப் போய்ப்பதுங்கியிருந்தேன். இப்போது எல்லாருக்குமே வாத்தியார் ஞாபகம் வர, எங்கும் நிசப்தம் நிலவியது. ஒவ்வொருவரும் தன்தன் வேலையில் கருத்தாயிருப்பதுபோல் பாசாங்கு செய்தோம்.

ஆனல், வாத்தியாரோ வாத்தியாராக அப்போது இல்லை. திடீரென்று நான் அவர்மேல் விழவும், அவர் திடுக்கிட்டெழுந்து உட்கார்ந்து, என்ன ஆச்சரியம்! எங்களைக் கவனித்தாரில்லை! பிரம்பை எடுத்தாரில்லை! கடிந்து பேசவும் இல்லை. ஆனல் உட்கார்ந்தபடியே பின்னல் இடது கையை ஊன்றிச் சாய்ந்து, எதிரில் யாரிடமோ பேசுபவர்போல்,

> மாதவியோ! கர்நகையோ! இங்கு வந்தவள் யாரடி?
> மாதவியானல் மடிமேல் வா,
> கர்நகையானல் கடக்கப்போ!

என்று இனிமையாகப்பாடி, வா, போ, எனபதற்கியையத்தன் வலக்கையால் சைகைகாட்டிச் சட்டென்று நிறுத்தினர். சுற்றிலும் வெருள வெருள விழித்தார், கண்களை பிசைந்தார். வாத்தியார் கோவலன் கூட்டை விட்டு வாத்தியாரானர். பிறகு வழக்கம்போல் எல்லாரையும் வழக்கு விசாரித்து வாதி பிரதிவாதி இருவருக்கும் வஞ்சனையின்றிக் கைக்கிரண்டிரண்டு பிரப்பம் பழங்கள் சுடச்சுட கொடுத்து, "எங்கே, எழுதினவெல்லாங் கொண்டுவாருங்கள்" என்று பாடம் நடத்தவாரம்பித்தார்.

அன்று எங்கள் வாத்தியார் விபரீதமாக நடந்துகொண்டதின் ரகசியம் வெகுநாள்வரை எனக்குத் தெரியாதிருந்தது. பல வருஷங்களுக்குப்பின் நானும் அவரும் சந்தித்தபோது, திருநெல்வேலிக்காரர் எங்களூரில் நடத்திய கோவலன் நாடகத்தைப்பற்றியும், அன்று எங்கள் ஊருக்கருகில் உள்ள பட்டினத்தில் காட்டப்படும் "T. P. ராஜலக்ஷ்மி நடித்த சங்கீத கோவலன்" தமிழ் பேசும் பாடும் படக்காட்சியைப்பற்றியும் பேசிக்கொண்டோம். அப்போது எங்கள் வாத்தியரைப்பார்த்து, அவர் பள்ளிக்கூடத்தில் கோவலன் ஆக்ட் செய்ததைக்குறிப்பிட்டு, வேடிக்கையாக

> "தன்னைமறந்தின்பமுற வாத்தியாரே — என்ன
> தந்திரம் செய்தீர்கள் ஐயா வாத்தியாரே?"

என்று நான் கேட்கவும்,

> "முந்தியநாட் கோவலன்நா டகம்பார்த்தேன் — அந்தச்
> சிந்தையில் மெய் மறந்தெழுந்திருந்தேன் நான்"

என்று அவரும் வேடிக்கையாக பதிலளித்தார்.

அ. துரைசாமி பிள்ளை.

## மதிப்புரை.

### நாடகவியல்.

இந்நூல் பண்டிதர் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் B. A. அவர்கள் இயற்றியதாகும் இதற்குப் பண்டிதர் ந. பலராம அய்யர் உரை எழுதியிருக்கின்றார். இதனைப் படிப்போரை வசீகரிக்கும் விதமாக நல்ல கடிதத்தில் தெளிவான எழுத்துக்களில் பதிப்பித்துள்ளார்கள். இத்தகைய பதிப்புகள் தமிழ்நாட்டிற்கு அவசியம் வேண்டும்.

பண்டைக்காலம் முதல் தமிழ் இலக்கணத்தில் நாடகம் என்பது இருந்துவந்திருக்கிறது. இருந்தாலும் பண்டைய நாடகங்களும் நாடக இலக்கணங்களும் மறைந்துபோயின. தமிழ் அபிவிருத்திக்கு ஏற்றபடி நூதன நாடகங்களும் அவைகளின் இலக்கணங்களும் ஏற்படவேண்டி இருந்தன. அச்சமயத்தில் தமிழ்ப்பண்டிதர் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரும் அவரோடிருந்து தமிழ் ஆராய்ந்த ஏனைய புலவர் பெருமக்களும் நூதன நாடகங்களை இயற்றினார்கள். அந்நாடகங்களுக்கு ஒரு இலக்கணமாக இந்நூல் இயற்றப்பட்டது. அதற்குத் தெளிவான உரை ஒன்று பண்டிதர் ந. பலராம அய்யர் அவர்கள் இயற்றினார்கள். அவ்வுரையில் பல விசேஷங்கள் உள்ளன. வடமொழி, ஆங்கிலம் முதலியவைகளிலிருந்து ஏற்ற மேற்கோள்களைப்பொருக்கிஎடுத்து ஆங்காங்கு உதாரணங்களாக எடுத்தாண்டிருக்கின்றார்கள் மேலும் பண்டைக்காலத்து தமிழ் இலக்கிய மேற்கோள்களேயன்றி தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் நூதன நாடகப்பகுதிகளையும் ஆங்காங்கு எடுத்தாண்டிருக்கின்றார்கள். இந்நூல் கலாசாலை மாணவர்களுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும். நூதனமாக நாடகங்கள் இயற்றவேண்டும் என்ற எண்ணம்கொண்ட ஆசிரியர்களுக்கும் இந்நூல் மிகுந்த பலன் தரும். இதனை தமிழ் அன்பர்கள் பாராட்டுவார்களாக.

## இந்திய பத்திரிகைத் தொழிலியல்.

## (Indian Journalism)

இந்நூலை கோயமுத்தூர் விளாங்குறிச்சி வி. நா. மருதாசலக் கவுண்டர் அவர்கள் இயற்றியுள்ளார்கள். தமிழில் தற்கால இயல்களைப்பற்றி நூல்கள் மிகவும் குறைவு. அவ்வியல்களிலும் பத்திரிகைத் தொழிலியல்களைப்பற்றி இதுவரை எழுதினார் ஒருவருமில்லை. பத்திரிகைத் தொழிலே நம் தமிழ்நாட்டில் சமீபத்தில்தான் ஓங்கி வரு

கின்றது. இன்னும் அத்தொழிலுக்குப் போதுமான ஆதரவு ஏற்படவில்லை. எந்நாட்டில் பத்திரிகைத் தொழில் அதிகமாக மேம்பட்டு வருகிறதோ அந்நாட்டில்தான் மக்கள் அபிப்பிராயமும் ஒன்றுபட்டும் மேம்பட்டும் நிற்கும். அப்போதுதான் அந்நாட்டின் நாகரீகமும் முதிர்ந்து நிற்கும். அந்நாட்டு மொழியும் முன்னேற்றமடையும். தமிழ்நாட்டில் இதுகாறும் அத்தகைய நிலைமை வரவில்லை. முதல் முதலாக அந்நிலைமையைக் கொண்டுவரும் எண்ணத்துடன் திரு. மருதாசலக் கவுண்டர் அவர்கள் இவ்வரிய நூலை இயற்றியுள்ளார். இதனைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்வார்களாக.

மேலும் சர்வகலா சங்கத்தாரும் பத்திரிகைத் தொழிலின் விருத்தியை உத்தேசித்து அத்தொழிலைப்பற்றிய பரீக்ஷையும் ஏற்படுத்த உத்தேசம் வைத்திருக்கிறார்கள். இந்தச் சமயத்தில் அவ்வியலைப்பற்றிய நூல்கள் அவசியம் ஏற்படவேண்டும். காலத்திற்கேற்ப நமது கவுண்டர் அவர்கள் இந்நூலை இயற்றியது மாணவர்களுக்கு மிகுந்தபயன் ஏற்படக்கூடியதே. சர்வகலாசங்கத்தாரும் இந்நூலை ஆதரிப்பார்களாக. இந்நூலில் ஏனைய நாட்டுத்தொழில்களைப்பற்றி எடுத்துக்காட்டியிருப்பதோடு நம்நாட்டுப் பத்திரிகைத் தொழில் எவ்வாறு மேம்பாடு அடையமுடியும் என்று கூறப்பட்டுள்ளது. இந்நூல் நடையும் பிரசுரமும் அழகாகவே இருக்கின்றன.

## கிட்டப்பா பிரசுரம்.

1. கிட்டப்பா சரிதம்
2. தேசீய கீதம்
3. கனிந்த காதல்

இம்மூன்று நூல்களும் ஆக்கூர் அனந்தாச் சாரியார், தேசபக்தர் ஜமதக்னி இவர்களுடைய பதிப்புகள் ஆகும். சங்கீத உலகிற்கு மிகுந்த பலனை இவைகளில் முதல் இரண்டும் தரக்கூடியவை. மூன்றாவது ஒரு சிறு கதையின் மொழி பெயர்ப்பாகும். இப்பிரசுரத்தார் இன்னும் பல அருமையான நூல்களை வெளியிடுவார்களாக.